# மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், நாமக்கல் – 637 001.

## மியாவாக்கிக் காடு உருவாக்கும் விழா

******

நாமக்கல் பவுல்டரி டவுன் ரோட்டரி சங்கம், பவுல்டரி டவுன் இன்னர்வீல் சங்கங்களின் நிதி உதவியில் நாமக்கல் மாவட்ட தேசியப் பசுமைப்படையின் வழிகாட்டுதலில் நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் 15.3.2025 அன்று மியாவாக்கிக்காடு உருவாக்கப்பட்டது.

மியாவாக்கிக்காடு உருவாக்கும் விழாவின் வரவேற்புரையில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு கல்வி மற்றும் தேசியப் பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் ரகுநாத் "நாமக்கல் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி மியாவாக்கிக்காடு ஒரு முழுமையான, முன்மாதிரியான அமைப்பில் உருவாக்கப்பட்டிருப்பதால் எதிர்காலத்தில் மியாவாக்கிக்காடு சார்ந்த சூழலியல் ஆராய்ச்சியில் இது மாதிரி வனமாக எடுத்துக்கொள்ள வாய்ப்புள்ளதாகக் கூறினார்".

நாமக்கல் பவுல்டரி டவுன் ரோட்டரி சங்கத்தலைவர் பிரபாகரன், இன்னர்வீல் சங்கத்தலைவி புவனேஸ்வரி, நாமக்கல் மாநகராட்சி சுகாதார அலுவலர் திருமூர்த்தி போன்றோர் முன்னிலை வகித்தனர். ரோட்டரி தலைவர் பிரபாகரன் முன்னிலை வகிக்கும்போது " மியாவாக்கிக்காடு இன்றைய சூழலில் ஒரு முக்கியத் திட்டமாகக் கருதப்படுகிறது" என்றார். நாமக்கல் மாநகராட்சியின் மேயர் கலாநிரி, ரோட்டரி மாவட்ட முன்னாள் ஆளுநர் சரவணன் போன்றோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். மேயர் கலாநிதி பேசுகையில் மாநகராட்சிக்குள் அமையும் முதல் மியாவாக்கிக்காடு இதுவாகும் எனக் கூறினார். ஆசிரியர் பயிற்சியின் போது இந்நிறுவனத்திற்கு வரும் ஆசிரியர்களுக்கு இந்த மியாவாக்கிக்காடு ஒரு மாதிரிக்காடாக இருக்கும் என ரோட்டரி மாவட்ட ஆளுநர் சரவணன் கூறினார்.

நாமக்கல் பவுல்டரி டவுன் ரோட்டரி முன்னாள் தலைவர் பன்னீர்செல்வம், நாமக்கல் டிரான்ஸ்போர்ட் சிட்டி ரோட்டரி சங்க உறுப்பினர் மணிக்குமார் போன்றோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இந்நிறுவனத்தில் உள்ள மியாவாக்கிக்காடானது பள்ளிகளிலும் உருவாகக் காரணமாக அமையும் என பன்னீர்செல்வம் கூறினார். இந்நிறுவன விரிவுரையாளர் சிவபெருமான் நன்றியுரை கூறினார்.

நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் செல்வம் தனது தலைமையுரையில் பேசியதாவது :

மியாவாக்கிக்காடுகள் 3 x 3 அடியில் அடர்த்தியாக நாட்டு தாவர இனங்களை அடர்த்தியாக நட்டு அடர்வனத்தை உருவாக்கும் முறை ஆகும். நெருக்கமாக தாவரங்களை நடுவதால் உணவுத் தயாரிக்க சூரிய ஒளியின் தேவைக்காக அவைகள் போட்டிப்போட்டுக் கொண்டு வேகமாக

வளர்கின்றன. பல்வேறு இலையடுக்குகள் உருவாவதால் காட்டின் ஈரம் ஆவியாகாமல் தடுக்கப்படுகிறது. தாவரங்களின் வேர்கள் நெருக்கமாக வளர்ந்து நிலத்தின் ஈரம் காக்கப்படுகிறது. இதனால் மண்ணின் வளம் அதிகரிக்கும். அதிகப்படியான கரியமிலவாயு ஒளிச்சேர்க்கைக்காக உறிஞ்சப்படுவதால் வளிமண்டலத்தில் வெப்பம் குறையும்.

மியாவாக்கிக்காடு இருக்கும் இடத்தில் நுண்ணிய காலநிலை வேறுபாடு இருக்கும். பறவைகள் தங்குவதற்கு வாழிடம் கிடைக்கும். பறவைகளுக்கு பழங்கள் உணவாகக் கிடைக்கும். வௌவால்கள், தேனீக்கள், வண்ணத்துப்பூச்சிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். இதனால் விவசாயப் பயிர்களில் மகரந்தச்சேர்க்கை நடைபெறுவதால் விவசாய மகசூல் அதிகரிக்கும் எனக் கூறினார்.

நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் 5400 சதுர அடி கொண்ட மியாவாக்கிக்காட்டில் நாமக்கல் மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை உரக்கிடங்கிலிருந்து பெறப்பட்ட குப்பை 3 அடி ஆழத்தில் போடப்பட்டு, அதில் சொர்க்கமரம், சவுக்கு, மகிழம், மலைவேம்பு, ஏழிலைப்பாலை, கருநொச்சி, ராம்புட்டான், சப்போட்டா, ஊட்டி ஆப்பிள், கிலாக்காய், விளாம்பழம், பட்டர் பழமரம், வாட்டர் ஆப்பிள், சாத்துக்கொடி, கோணபுளிமரம், நாட்டு அத்தி, செம்மரம், பாதாம், சந்தனம், பட்டை, ஆப்ரிகன் கயா, முழுநெல்லி, நாட்டு நெல்லி, சீதாப்பழமரம், பலா, நாவல், தேக்கு, மாதுளை, பூவரசு, நார்த்தங்காய் மரம், மகாக்கனி, செம்மரம், புங்கை, வேங்கை, மாமரம், எழுமிச்சை மரம், முள்சீதா மரம், கொய்யா மரம், இலுப்பை, புளிய மரம், புன்னை தகரமரம், வேம்பு, மாமரம், அரசமரம், சர்க்கரைப்பழமரம், நெட்டியலிங்கம், ஆடுகொடாப்பாலை போன்ற 48 இன மரங்கள் நடும் நிகழ்வினை மேயர் கலாநிதி அவர்கள் துவக்கி வைக்க ரோட்டரி சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் முனனிலையில் நாமக்கல், சேலம், கரூர் மற்றும் திருச்சி மாவட்டங்களிலிருந்து வருகைப்புரிந்த 100 ஆசிரியர்களால் நடத்தப்பட்டன.